

தேனி நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வனுக்கு தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் வீரவாள் கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் புதிய இலச்சினை!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டார்!

திருப்பூர், ஜீன் 17-

**திருப்பூர் மாவட்டத்தில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் புதிய இலச்சினையினை வெளியிட்டார்.**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இலச்சினை வெளியிடப்பட்டு 30 ஆண்டுகள் பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் தமிழ்நாடு பல்வேறு விளையாட்டு களில் பெரும் முன்னேற்றம் அடைந்து வருவதால், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தனித்துவத்தை வெளிப் படுத்தவும் பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளை பிரிதிபலிக்கவும் தமிழ்நாட்டின் வரைபடத்தை உள்ளடக்கிய புதிய இலச்சினை வடிவமைக்கப்பட்டுள்ளது.

புதிய இலச்சினையில் இடம்பெற்றிருக்கும் மஞ்சள் நிறம் ஆற்றல் மற்றும் விளையாட்டு ஆர்வத்தையும், நீல நிறம் சுதந்திரம் மற்றும் உத்வேகத்தை குறிக்கும் வகையிலும் இடம் பெற்றுள்ளது. மேலும் இலச்சினையைச் சுற்றி அமைந்துள்ள வட்ட வடிவம் தமிழ்நாடு விளையாட்டுத் துறை முன்னேற்றத்தின் சான்றாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கூடுதல் தலைமை செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கு.சுப்புராயன், மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் பி.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் கே. செல்வராஜ், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜே. மேகநாத ரெட்டி, மாவட்ட ஆட்சியர் திரு தா. கிறிஸ் துராஜ், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருமதி.கோ. மலர் விழி, சர்வதேச தடகள வீரர் ஒலிம்பியன் தருண் அய்யாசாமி, தேசிய தடகள வீராங்கனை செல்வி. ஆர். பிரவீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்த நாளை முன்னிட்டு மானூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மாரியப்பன் ஏற்பாட்டில் ஸ்ரீ காந்திமதிஅம்மன் அன்பு இல்லத்தில் மாணவிகளுக்கு காலை,மதியம்,இரவு ஆகிய மூன்று வேளை உணவுகளை நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் வழங்கினார். நிகழ்வில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன்,மாணவர் அணி அமைப்பாளர் கல்லூரி பாலா, மானூர் தெற்கு ஒன்றிய பொருளாளர் மகாராஜன், கிளைச் செயலாளர்கள் மேலவாசி,அர்ஜுன பாண்டியன், லட்சுமணன்,ஐயப்பன், சொக்கலிங்கம், அர்ஜுனன், நெல்லை மணி,மாரிமுத்து உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

### பெண்கள் - குழந்தைகளுக்கான 200 படுக்கைகள் கொண்ட

# காவேரி குழுமத்தின் புதிய மருத்துவமனை!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்!

திருச்சி, ஜுன் 17-

காவேரி குழும மருத்துவ மனைகள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள 200 படுக்கைகள் கொண்ட அதி நவீன மருத்துவமனையான காவேரி மருத்துவமனை திறப்பு விழா நடைபெற்றது. நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே. என் .நேரு மருத்துவ மனையை திறந்து வைத்து குத்துவிளக்கு ஏற்றி வைத்தார். விழாவில் மாநகராட்சி மேயர் அன்பழகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

விழாவிற்கு காவேரி குழும மருத்துவமனை களின் நிறுவனர் மற்றும் செயல் தலைவர் டாக்டர் எஸ் சந்திரகுமார், காவேரி குழும மருத்துவமனை களின் நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் எ ஸ் . ம ணி வ ண் ண ன் . காவேரி குழும மருத்துவ மனைகளின் இணை நிறுவனர் மற்றும் செயல் இயக்குனரும், தலைமை குழந்தைகள் நல மருத்துவருமான டாக்டர். டி செங்குட்டுவன் ஆகியோர் தலைமை தாங்கினர்.

விழாவில் கோட்ட தலைவர்கள் விஜயலட்சுமி கண்ணன் துர்கா தேவி கவுன்சிலர் கலைச்செல்வி பகுதி செயலாளர் மோகன் தாஸ், தில்லை நகர் கண்ணன், மாவட்ட பிரதிநிதி வக்கீல் மணிவண்ண பாரதி மற்றும் ஏராளமான தொழிலதிபர்கள், மருத்துவர்கள், உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொண்டனர்.

திருச்சியின் மையப்பகுதியில் அமைந்துள்ள மா காவேரி மருத்துவமனை இப்பகுதியில் மிகவும் மரியாதைக்குரிய மற்றும் நம்பகமான சேவையை வழங்க வேண்டும் என்ற பார்வையை அடிப்படையாகக் கொண்டும், இந்த புதிய வசதி, குழந்தை மருத்துவம் மற்றும் மகப்பேறு மருத்துவப் பராமரிப்பில் புதிய தர நிலைகளை அமைக்கவும் உறுதியளிக்கிறது. குழந்தை களுக்கான அனைத்து சிறப்பு மருத்துவம் மற்றும் தீவிர சிகிச்சை ஆகியவற்றில் முதன்மையான கவனம் செலுத்தி பல்வேறு சூப்பர் ஸ்பெஷாலிட்டி சேவைகளை வழங்கவிருக்கிறது.

கடந்த 25 ஆண்டுகளாக நமது குழந்தைகள் நலத் துறை மற்றும் மகளிர் மருத்துவ துறையின் பயணம் குறிப்பிடத்தக்கது. மிகவும் மரியாதைக்குரிய மற்றும் நம்பகமான சுகாதார வழங்குநராக இருக்க வேண்டும் என்ற எங்கள் பார்வைக்கு இணங்க, காவேரியில் அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் உயர் பயிற்சி பெற்ற நிபுணர் குழுவின் சேவை 24 மணி நேரமும் கிடைக்கும். குழந்தை மருத்துவ பிரிவில் குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு, குழந்தை புற்று நோயியல், குழந்தை இரைப்பை குடல், குழந்தை சிறுநீரக வியல் மற்றும் நி யோ னா ட் டா ல ஜி போன்ற சேவைகள் உள்ளன.

குழந்தைகளுக்கான அவசர சிகிச்சைக்கான பிரத்யேக 11 படுக்கைகள் கொண்ட அவசர சிகிச்சைப் பிரிவு, 16 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவு,10 படுக்கைகள் கொண்ட தீவிர கண்காணிப்பு பிரிவு,50 படுக்கைகள் கொண்ட பச்சிளம் குழந்தை தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் 5 படுக்கைகள் கொண்ட எலும்பு மஜ்ஜை, கல்லீரல் மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கான சிறப்பு பிரிவு ஆகியவை இந்த மருத்துவமனையில் உள்ளன.

காவேரி, மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவ துறை 24 மணி நேர மகப்பேறு மற்றும் அதிக ஆபத்துள்ள கர்ப்ப பராமரிப்பு, மேம்பட்ட லேப்ராஸ்கோபிக் மகளிர் அறுவை சிகிச்சை, கரு மருத்துவம், குழந்தை இன்மை சிகிச்சை, மகளிருக்கான உயர் சிறப்பு சிகிச்சைகள் மற்றும் புற்றுநோயியல் சிகிச்சை உள்ளிட்ட பெண்களின் ஆரோக்கியத்தை மையமாகக் கொண்ட விரிவான சேவைக ளை வழங்குகிறது. 24 மணிநேர மகளிர் அவசர சிகிச்சை பிரிவு, மேம்படுத்தப்பட்ட பிரசவ அறைகள், நவீனமயமான அறுவை சிகிச்சை அரங்குகள், மகளிருக்கான தீவீர சிகிச்சை பிரிவு, உலக தரம் வாய்ந்த அதி நவீன மருத்துவ உபகரணங்கள் போன்ற வசதிகளை உள்ளடக்கியது

இ ம் ம ரு த் து வ ம னை . இணை நிறுவனர் மற்றும் செயல் இயக்குனரும், தலைமை குழந்தைகள் நல மருத்துவருமான டாக்டர். டி செங்குட்டுவன் கூறும் போது,

“காவேரி மூலம் திருச்சி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள குடும்பங்கள் உய ர்தர குழந்தை நல சிகிச்சைக்காக வேறு நகரங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. எங்கள் மருத்துவ மனை விரிவான சிகிச்சை வசதிகளை அளிக்கிறது. உங்கள் வீட்டிற்கு அருகி லேயே எங்கள் குழந்தை நோயாளிகளுக்கு சிறந்த மருத்துவ சேவையை உறுதி செய்கிறது” என்றார்.

காவேரி குழும மருத்துவ மனைகளின் நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் எஸ். மணி வண்ணன் கூறும் போது, பெண்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். “காவேரி மூலம், பெண்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் விரிவான சிகிச்சையைப் பெறும் புகலிடத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். அதிக ஆபத்துள்ள கர்ப்பங்கள் முதல் மேம்பட்ட மகளிர் மருத்துவ அறுவை சிகிச்சைகள் வரை, உயர்தர மருத்துவ பராமரிப் புடன் பெண்களுக்கு ஆதரவளிப்பதே எங்கள் குறிக்கோள்” என்றார்.

### நீலகிரி நாடாளுமன்றத் தொகுதியில்

# ஆ.இராசா எம்.பி.யை வெற்றி பெற வைத்த வாக்காளர்களுக்கு நன்றி!

## நீலகிரி மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

நீலகிரி, ஜுன் 17-

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவை தலைவர் போஜன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் அனைவரையும் வரவேற்றார். மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிகுமார், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் காசிலிங்கம், இளங்கோவன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் பொன்தோஸ், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் பரமேஸ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நகர செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, இளஞ்செழியன் பாபு, ஒன்றிய கழக செயலாளர்கள் லியாகத் அலி, பரமசிவன், காமராஜ், லாரன்ஸ், பிரேம்குமார், நெல்லை கண்ணன், பீமன், சிவானந்தராஜா, சுஜேஷ், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, சதக்கத்துல்லா, தொரை, பில்லன், செல்வம், அமிர்தலிங்கம், வீரபத்திரன், மோகன் குமார், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், சதீஷ்குமார், நடராஜ், சுந்தரராஜ், முத்து, சுப்ரமணி, சின்னவர், சஞ்சீவ்குமார், ரமேஸ்குமார், காளிதாஸ், மார்டின், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் இமயம் சசிகுமார், கோமதி, காந்தல் ரவி, எல்கில்ரவி, விவேகானந்தன், ராமச்சந்திரன், ஜெயந்தி, ஆலன், ராம்குமார், பவீஷ், வெங்கடேஷ், சிவசுப்ரமணியம், ஜெயகுமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நாகராஜ், பத்மநாபன், முரளிதரன், வினோத்குமார், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் சுனிதா, கீர்த்தனா, மாயன், நகராட்சி தலைவர்கள் வாணீஸ்வரி, பரிமளா, சிவகாமி, பேரூராட்சி தலைவர்கள் கலியமூர்த்தி, கௌரி, ஜெயகுமாரி, ஹேமமாலினி, சத்தியவாணி, சித்ரா தேவி,வள்ளி, பங்கஜம், சிறப்பு அழைப்பாளர்கள் தொமுச மாவட்ட கவுன்சில் செயலாளர் ஜெயராமன், தொ.மு.ச. மண்டல பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன், தோட்ட தொழிலாளர் தொ.மு.ச. பொதுச் செயலாளர் செல்வராஜ் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்ட முடிவில் மாவட்டப் பொருளாளர் நாசர் அலி நன்றி கூறினார்.

கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

**தமிழ்நாடு வாக்காளர்களுக்கு நன்றி!**

கடந்த 19.4.2024 அன்று தமிழகம் மற்றும் புதுச்சேரி உட்பட 40 நாடாளுமன்ற தொகுதிகளுக்கும் தேர்தல் நடந்தது இதன் முடிவுகள் கடந்த 4.6.2024 அன்று வெளியானதில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி வேட்பாளர்கள் 40 பேர் மாபெரும் வெற்றிப்பெற்றுள்ளனர்.

இந்திய ஜனநாயகம் காப்பாற்றப்பட, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் இலட்சியங்களுக்கு எல்லாம் வாரிசாக திகழ்ந்து நம்மையெல்லாம் வழிநடத்தும் கழக தலைவர் முதல்வர் அவர்கள் தலைமையில் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை தமிழக மக்கள் முழுமையாக தேர்வு செய்துள்ளனர். இது கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்புமிக்க கழக அரசிற்கு கிடைத்துள்ள மிகப்பெரிய அங்கீகாரமாகவும், நம் கழக தலைவர் அவர்கள் மீது தமிழக மக்கள் வைத்துள்ள நம்பிக்கையின் வெளிப்பாடாகவும் அமைந்துள்ளது.

இந்த மாபெரும் மகத்தான வெற்றி கிடைப்பதற்காக கழக முன்னணி தலைவர்களுடன் கலந்தாலோசித்து, கூட்டணி கட்சிகளை ஒருங்கிணைத்து, கழக வேட்பாளர்களை சரியாக தேர்வுசெய்து ஓய்வின்றி உழைத்து, ஒவ்வொரு கழக தொண்டர்களும், தமிழக மக்களும் மகிழும் வகையில் கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்களும், இளைஞர்களின் எழுச்சி நாயகன், கழக இளைஞர் அணி செயலாளர் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டா லின் அவர்களும் மேற்கொண்ட தேர்தல் பிரச்சாரம் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியதின் பயனாக இந்த மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது. இந்த வெற்றியின் மூலம் நம் தலைவர் தளபதி அவர்கள் தேசிய தலைவர்கள் வரிசையில் இடம் பிடித்துள்ளார் என்பது நமக்கெல்லாம் பெருமை ஆகும்.

இதற்காக, கழக தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள், தமிழ்நாடு முழுவதும் நமது தலைவர் அவர்களின் 40/40 என்கிற இலட்சியத்தினை நிறைவேற்றிட உழைத்து ஒவ்வொரு கழக தொண்டர்களுக்கும் இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றியினையும், வாழ்த்துகளையும் தெரிவித்து மகிழ்கிறது.

**தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி!**

நீலகிரி நாடாளுமன்ற தொகுதியில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளராக கழக தலைவர் முதல்வர் அவர்களால் முன்னாள் மத்திய அமைச்சர் - கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா அறிவிக்கப்பட்டார்.

நீலகிரி மக்கள் நலனில் பெரிதும் அக்கறைகொண்டு தனக்கு பொறுப்புகள் இல்லாத காலங்களிலும்கூட நீலகிரிக்கு வருகை தந்து இரவு பகல் பாராமல் நீலகிரியில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு காலங்களிலும் மக்களோடு மக்களாகவே தன்னை அர்ப்பணித்த ஆ.இராசா அவர்களை கடந்த 2019ம் ஆண்டு தேர்தலை விட அதிகமாக வாக்களித்து சுமார் 2.40 லட்சத்திற்கும் மேலான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிப்பெற செய்த நீலகிரி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாக்காளர்களுக்கும், இந்த மாபெரும் வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை அறுவடை செய்ய கடும் உழைப்பினை வழங்கிய கழக நிர்வாகிகளுக்கும், வெற்றிக்காக உடன் உழைத்த தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் நீலகிரி மாவட்ட திராவிட முன்னேற்ற கழக செயற்குழு கூட்டம் தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்து மகிழ்கிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தி.மு.க. வழக்கறிஞர் அணி

# மாநில நிர்வாகிகள் கூட்டம்!

**கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி. அறிவிப்பு!**

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (17-06-2024 - திங்கட்கிழமை) காலை 10.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் உள்ள “தி.மு.க. சட்டத்துறை அறையில்” எனது தலைமையில், சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் துணைச் செயலாளர்கள் மற்றும் தலைமைக் கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : வழக்கறிஞர் அணி செயல்பாடுகள் குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 14.6.2024

**என்.ஆர்.இளங்கோ, எம்.பி.**
செயலாளர்,
தி.மு.க. சட்டத்துறை.



நெல்லை மாநகர தி.மு.க சார்பில் கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாளை முன்னிட்டு தொடர் 101 நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. நெல்லை சந்திப்பு த.மு. சாலையில் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவிக்கும் நிகழ்வு,பொதுமக்களுக்கு அறுசுவை உணவு,12ம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு கைபேசி ஆகியவை வழங்கும் நிகழ்வு தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று அறுசுவை உணவு வழங்கினார். நிகழ்வில் நமச்சிவாயம்,அன்டன் செல்லத்துரை,அலிஃப் மீரான், அப்துல்கையூம்,வேங்கை வெங்கடேஷ்,ஜவகர்,ஸ்டார் முருகன்,சிவா,ராபர்ட் செல்லையா,ராஜ்,கேபிள் குமரேசன்,கிங்பாலா உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## நெல்லை கணபதி ராமசுப்பையா

## ஜுன் 17 (2006)



**கழகத்தில் துவக்கக் காலந்தொட்டு உறுப்பினராக இருந்தவர். மாணவப் பருவத்திலிருந்தே திராவிட இயக்க உணர்வுடன் இந்தி எதிர்ப்பு, கம்யூனல் ஜி.ஒ. ரத்து, கருப்புக்கொடி, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, தேவிகுளம் பீர்மேடு மீட்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்றவர்.**

**மாணவர் தி.மு.க. சார்பில் நடைபெற்ற மாநாடுகளில் அமைப்பாளராக சிறப்புற பணியாற்றியவர்.**

**தனது நெருங்கிய நண்பர் பண்ருட்டி ராமச்சந்திரன் கழகத்திற்கு துரோகம் செய்து, கழகத்தைவிட்டு வெளியேறியபோதும் ‘தனது தலைவர் கலைஞர்தான்’ என்று தொடர்ந்து கழகத்தில் பணியாற்றியவர்.**

**அண்ணாமலைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**